1993 ஏப்ரல் 30]

சாலையிலே ஏதாவது ஒரு புரொபெக்ஷனைச் செய்து செல்ஃப் சஸ்டெயினிட்டி என்ற நிலையை உருவாக்குகின்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் உண்டாகும் என்பதால் நம்முடைய கல்வித் துறையில் 'த்ரீ டையர் சிஸ்டம்' என்ற முறையை வலிவுபடுத்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசிலே இன்று நடைமுறையிலே இருக்கின்ற 3 அடுக்குத் திட்டம் என்று நான் குறிப்பிட்டதும் 4 அடுக்குத் திட்டம் என்று நான் குறிப்பிட்டதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியைப் பார்க்கிறபோது வேறாக இருப்பதுபோல் தெரிகிறது. அதை விளக்கமாக தனிக் கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரத நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் நம்முடைய தமிழ்நாட்டில் மறுமலர்ச்சியையும் பேணிக் காக்கின்ற வகையில் நம்முடைய கல்வித் துறையில் புதிய புனிதமான மறுமலர்ச்சியைச் செய்வதற்கு ஏதேனும் திட்டங்கள் நம்முடைய கல்வித் துறையின் சார்பாக ஆய்வில் உள்ளதா? ஆம் எனில், அதைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய ஒருமைப் பாட்டிற்கு என்ன செய்யலாம் என்ற அடிப்படையிலே நாம் சிந்தித்துப் பார்த்துத்தான் தேச பக்தியை ஒரு பாடமாக வைப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம், அது இந்த ஆண்டு முதல் அமலுக்கு வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 545, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

545—

சுந்தரராஜபுரம் உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

*11009—திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) இராஜபாளையம் தொகுதியைச் சேர்ந்த சுந்தர ராஜபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது உயர்த்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் 10 பள்ளிகளுக்கு மட்டுமே மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட நிதி வசதி இருந்தது, வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப இது பரிசீலிக்கப்படும்,

முற்பகல் 10-15

திரு இ. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுந்தரராஜபுரம் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 9 கிராமங்களிலும் சேர்த்து சுந்தரராஜபுரத்தில் ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளி தான் இருக்கிறது. இதில் அதிகமாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத் தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மாணவ மாணவியர் 500—க்கு மேற்பட்டவர்கள் படிக்கின்றார்கள். இது பல வருடங்களாக உயர்நிலைப் பள்ளியிலிருந்து மேல் நிலைப்பள்ளியாக மாறாமல் இருப்பதால் அதிகமான அந்த ஏழை எளிய குழந்தைகள் 10 ஆவது முடித்த உடன் மேற்கொண்டு படிக்க வசதி இல்லாமல் நின்று விடுகிறார்கள். படிப்பை முடித்துக்கொண்டு விடுகிறார்கள். அதனால், அங்கே நிறையப் பேர் மேற்படிப்பு படிக்க வசதியில்லாமல் இருப் பதால், இந்த நிதியாண்டிலாவது அதற்கு முன்னுரிமை கொடுத்து அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு, பள்ளி களை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்குப் பரி சீலிக்கின்றபோது இதுபோன்ற நிலைமைகளை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதன்படி நாம் அனுமதி வழங்கி வருகின்றோம். இந்த ஆண்டில் இதுபோன்ற பரிசீலனை நடக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் இதே பள்ளியில் வேலை பார்க்கின்ற ஆசிரியைகள் மீது, அங்கு வாட்ச்மேன் இல்லாததாலே அந்த பிளாக் போர்டில் அந்த பெண் டீச்சர்களைப் பற்றி அவதூறாக தப்பான வார்த்தைகளை எழுதி வைத்து கீழ்த்தரமான செயலிலே அங்கேயுள்ள சுற்றத்தார்கள் ஈடுபடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அங்கே வாட்ச்மேன் போன்ற ஆட்களை அமர்த்தி இதுபோன்று தேவை இல்லாமல், படிக்கக்கூடிய இடத்தில் விமர்சனங்கள் எழுதப்படுவதைத் தடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக காவலர் பணியிடமோ, ஆசிரியர் பணியிடமோ தருவது என்பது நிதி ஆதாரங்களைப் பொறுத்துத்தான் ஆண்டுக்கு ஆண்டு அரசு அனுமதி தந்து வருகிறது. அதற்கு ஏற்ப அந்தப் பள்ளியினுடைய பிரச்சினையும் கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன சில செய்திகளைக் கவனிக்கிறபோது அந்த ஊரில் அந்தப் பள்ளிக்கூடம் இருந்து நடைபெறுவதிலுள்ள சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அந்த ஊரில் உள்ளவர்களுக்கு தங்களுக்குப் பள்ளிக்கூடம் தேவை என்றால் ஒரு சமுதாய அடிப்படையில் நடந்துகொள்வார்களானால், இதுபோன்ற பிரச்சினைகள் வராது. மற்ற இடங்களிலும் இதுபோன்று நடக்கின்றபோது இப்படிப்பட்ட ஆலோசனைகளைத் தான் சொல்லுகின்றோம். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அந்த மக்களுக்குப் பள்ளிக்கூடம் தேவை என்றால், இப்படி எல்லாம் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டு இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 546. திரு ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

546—

கீரனூர் பேரூராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருந்தகமாக மாற்றுதல்

*9864—திரு ஏ. டி செல்லசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—